
அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2018

## 58 - நாடகமும் அரங்கியலும்

### புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை.

# க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2018

# புள்ளியிடும் திட்டம்.

# நாடகமும் அரங்கியலும் 58.

# புதிய பாடத்திட்டம்

நாடகமும் அரங்கியலும் பாடநெறியானது
வினாப்பத்திரம் -I, வினாப்பத்திரம் -II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது.
பகுதி I 40 பல்தேர்வு வினாக்களையும் பகுதி II 06 வினாக்களையும் கொண்டுள்ளது.
பகுதி I 40 வினாக்களும் கட்டாய வினாக்களாகும்.
ஒவ்வொரு வினாக்களுக்கும் 5 விடைகள் காணப்படும்.
அவற்றுள் சரியான ஒரு விடையைத் தெரிவு செய்து இலக்கத்தை அடைப்புக் குறியினுள் இட வேண்டும்.

**வினாப்பத்திரம் -I**

பகுதி - I 40 பல்தேர்வு வினாக்களுக்கும் **40 புள்ளிகள்**

பகுதி - II 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

**வினாப்பத்திரம் - II**

பகுதி - 1 40 பல்தேர்வு வினாக்களுக்கும் 40 புள்ளிகள்

பகுதி - 11 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்
பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

## வினாப்பத்திரம் - I

| | |
|---|---|
| பகுதி - I பல்தேர்வு வினாக்கள் | 40 புள்ளிகள். |
| பகுதி - II | |
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

# வினாப்பத்திரம் - II

பகுதி - I பல்தேர்வு வினாக்கள் 40 புள்ளிகள்.

பகுதி - II

| | |
|---|---|
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

இறுதிப்புள்ளி

| | |
|---|---|
| வினாப்பத்திரம் -1 | 100 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் -11 | 100 புள்ளிகள் |

இரு வினாப்பத்திரங்களின் புள்ளிகளையும் கூட்டி இரண்டால் வகுத்துப் பெறப்படும் புள்ளிகள் இறுதிப் புள்ளிகளாகும். $200/2 = 100$ புள்ளிகள்

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ...................................................................................... ✓ △ 4/5
......................................................................................
......................................................................................

(ii) ...................................................................................... ✓ △ 3/5
......................................................................................
......................................................................................

(iii) ...................................................................................... ✓ △ 3/5
......................................................................................
......................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்களை தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

15.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..................................

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** மேல்வருவனவற்றுள் படைப்பாளியின் துணையின்றி நயக்கக்கூடிய கலை வடிவம்
(1) நாடகம் (2) நடனம் (3) இசை
(4) இலக்கியம் (5) பலே (......)

**2.** தொலைக்காட்சி நாடகத்தின் பிரதான பண்புகளில் ஒன்று
(1) கேட்டலின் மூலம் நுகரப்படுதல்
(2) குரல் வெளிப்பாட்டைக் கொண்டிருத்தல்
(3) பார்வையாளர் துலங்கலுக்கு இடம் இல்லாதிருத்தல்
(4) யதார்த்த நாடகங்களாக அமைந்திருத்தல்
(5) கமராவை ஊடகமாகக் கொண்டிருத்தல் (......)

**3.** நடிகரின் தொடர்பாடலில் முதன்மை வகிப்பது
(1) சைகைகள் (2) பேச்சு (3) கண்
(4) பாடல் (5) உடல் (......)

**4.** மேல்வருவனவற்றுள் நாடகத்திற்கும் நாவலுக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுவது எது ?
(1) இலக்கியமொன்று காணப்படும்.
(2) கதைக் கட்டமைப்பு காணப்படும்.
(3) பாத்திரங்களைக் கொண்டிருக்கும்.
(4) பார்ப்போரின் ஊடாட்டத்திற்கு இடமிருக்கும்.
(5) படைப்பாளியின் கற்பனைக்கு இடமிருக்கும். (......)

**5.** நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் அரங்க வகைகளுள் 'விக்கிரஸ்ர' என்பது,
(1) சதுர அரங்கு ஆகும். (2) செவ்வக அரங்கு ஆகும்.
(3) முக்கோண அரங்கு ஆகும். (4) வட்ட அரங்கு ஆகும்.
(5) முன்துருத்திய அரங்கு ஆகும். (......)

**6.** வான்திரை/சைக்ளோராமா இன் பங்களிப்பு **அல்லாதது**
(1) வேட உடை அணிந்த நடிகரை மறைத்து வைக்க உதவுதல்
(2) பக்கம் மாற்ற உதவுதல்
(3) பின்னணிக் காட்சிகளை அமைக்க உதவுதல்
(4) மேடை ஒளியூட்டின் மாற்றத்துக்கு உதவுதல்
(5) பார்ப்போரையும் கேட்போரையும் பிரித்து வைக்க உதவுதல் (......)

**7.** குறியீட்டு ஒளியமைப்பினை அரங்கிற்கு அறிமுகப்படுத்தியவர்
(1) அன்ரூ அன்ரொயின் (2) அடொல்ப் அப்பியா (3) டேவிட் பெலஸ்கோ
(4) ஹென்றிக் பெக் (5) பிபினா (......)

**8.** நடிப்பின்போது உடலை நெகிழ்வாக வைத்திருப்பதற்கு உதவும் பயிற்சி
(1) புலனடக்கப் பயிற்சி (2) தளர்வுப் பயிற்சி (3) சுவாசப் பயிற்சி
(4) மூச்சுப் பயிற்சி (5) பேச்சுப் பயிற்சி (......)

**9.** கூத்து ஆடப்படும் இடமாக சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுவது
(1) ஆடுகளம் (2) வட்டக்களரி (3) நாடகசாலை
(4) கொட்டகை (5) கூத்தாட்டவை (......)

**10.** 'ஆஹார்ய அபிநயம்' என்பதனால் குறிப்பிடப்படுவது
(1) உடல்வழிச் சித்திரிப்பு (2) உணர்ச்சிவழிச் சித்திரிப்பு
(3) குரல்வழிச் சித்திரிப்பு (4) காண்பியவழிச் சித்திரிப்பு
(5) இசைவழிச் சித்திரிப்பு (......)

**11.** நாடகக் கட்டமைப்பில் கதைப்பின்னலை முக்கியமானதாகக் குறிப்பிட்டவர்
(1) பரதர் (2) சூரியநாராயண சாஸ்திரிகள்
(3) அரிஸ்டோட்டல் (4) தனஞ்சயன்
(5) ஒகஸ்ரா போல் (......)

**12.** மேல்வரும் கூற்றுகளுள் நாடக எழுத்துரு தொடர்பில் **பொருத்தமற்றது**
(1) அது வார்த்தைகளின் கலையாகும்.
(2) நாடக ஆசிரியரிடமிருந்து நடிகர் மூலம் பார்ப்போருடன் தொடர்புறும் கலையாகும்.
(3) பாத்திரத்தின் சொல்லாடல்கள், செயலியக்கங்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கும் கலையாகும்.
(4) நாடகத்தைப் படைப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்டிருக்கும் கலையாகும்.
(5) கால ஒழுங்கில் முறையான தகவல்களைக் கொண்டிருக்கும் கலையாகும். (......)

**13.** காவியபாணி நடிப்பு முறையின் அம்சம் **அல்லாதது**
(1) மோடிமைப்படுத்தப்பட்ட நடிப்பு முறை பயன்படுத்தப்படுதல்
(2) உரைநடையிலான சித்திரிப்பு முறை பயன்படுத்தப்படுதல்
(3) நடிப்புக்கு மருட்கை விளைவைத் தோற்றுவித்தல்
(4) செய்துகாட்டற் பண்பினைக் கொண்டிருத்தல்
(5) பார்ப்போரிடையே சிந்திப்பு மனோபாவத்தைத் தூண்டுதல் (......)

**14.** கியோஜின் என்னும் நகைச்சுவை இடையீடு வரும் அரங்கு
(1) கபுக்கி (2) புன்றகு (3) கோவாகா
(4) நோ (5) ஒபேரா (......

**15.** கிரேக்க மகிழ்நெறியில் வரும் பாடுநர் குழாம்,
(1) நாடகக் கதை மாந்தரின் உறவினரைக் கொண்டிருக்கும்.
(2) முற்றிலும் பெண்களைக் கொண்டிருக்கும்.
(3) மிருகபட்சிக் குழாம்களைக் கொண்டிருக்கும்.
(4) சற்றர்களைக் கொண்டிருக்கும்.
(5) மூத்தோரைக் கொண்டிருக்கும். (......

**27.** கற்பித மோடி நாடகங்களின் பிரதான இயல்பு
(1) மேடைப் பின்னணி குறியீடாக அமைதல்
(2) வேட உடைகள் மிகைப்படுத்தப்பட்டு காட்டப்படல்
(3) ஒப்பனை இயல்பானதாகக் காணப்படல்
(4) சொல்லாடல் வாழ்வை ஒத்ததாகக் காணப்படல்
(5) அளிக்கையானது ஆடல், பாடலைக் கொண்டிருத்தல் (......)

**28.** கபுக்கி அரங்கில் 'ஒன்ன கத்தா' குறிப்பது
(1) ஆண் வேடம் தாங்கும் பெண்களை
(2) ஆண் வேடம் தாங்கும் ஆண்களை
(3) பெண் வேடம் தாங்கும் பெண்களை
(4) பெண் வேடம் தாங்கும் ஆண்களை
(5) ஆண், பெண் வேடங்களைத் தாங்கும் பெண்களை (......)

**29.** 'நோ' நாடகங்களின் கட்டமைப்பை ஒழுங்குமுறையில் கொண்ட தெரிவு யாது ?
(1) ஆரம்பம், எத்தனம், பலன்
(2) ஆரம்பம், வளர்ச்சி உச்சகட்டம்
(3) ஆரம்பம், வளர்ச்சி, முரண்பாடு, சிக்கல், தீர்வு
(4) ஆரம்பம், வளர்ச்சி, சிக்கல், முரண்பாடு, தீர்வு
(5) ஆரம்பம், எத்தனம், நெருக்கடி, உச்சகட்டம் (......)

**30.** சாத்வீக பாவத்தின் 'வைவர்ணய' இன் மூலம் சுட்டப்படுவது யாது ?
(1) உடல் ஸ்தம்பித்து நிற்றல் (2) குரல் மாறுதல்
(3) கண்ணீர் சொரிதல் (4) உடல் நடுங்குதல்
(5) நிறம் மாறுதல் (......)

**31.** 1990 களில் ஈழத்தமிழ் அரங்க வெளிப்பாட்டில் மேற்கிளம்பிய முக்கிய அரங்க மூலகம்
(1) உடல்மொழி (2) ஒளியூட்டு (3) சொல்லாடல்
(4) காட்சி (5) இசை (......)

**32.** வடமோடிக் கூத்தில் பாத்திரங்களை அறிமுகப்படுத்துவது
(1) விளையாட்டுத் தரு (2) கொச்சகத் தரு (3) மறுதரு
(4) கொலுத் தரு (5) சபைத்தரு (......)

**33.** மேல்வருவனவற்றுள் ஒழுக்கப் பண்பு நாடகங்கள் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது ?
(1) மனிதர்களின் துர்க்குணமும் பலவீனமும் எடுத்துக்காட்டப்படும்.
(2) 16ஆம் நூற்றாண்டில் இவை பிரபல்யமாயின.
(3) பக்தி, சமய பிரசாரம் அல்லாது மானுடத்துவம் பற்றி எடுத்துக்கூறும்.
(4) மனித குல உண்மைக்கும் ஏமாற்று வித்தைக்கும் இடையிலான போராட்டமாகக் காணப்படும்.
(5) அற்புத நாடகங்கள் தோன்றிய காலத்திலேயே இவையும் தோன்றின. (......)

**34.** பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் யாது ?
(1) சிங்களத்தில் சிறந்த சமூக நாடகங்களை எழுதியமை
(2) சிறந்த கவிதை நாடகங்களை மேடையேற்றியமை
(3) சிங்கள பாரம்பரிய அரங்கின் அடிப்படையில் புதிய அரங்கைப் படைத்தமை
(4) மொழிபெயர்ப்பு நாடகங்களினூடாக நவீன அரங்கை உருவாக்கியமை
(5) சிங்களத்தில் சிறந்த ஆங்கில நாடக மரபைத் தோற்றுவித்தமை (......)

**35.** வேட உடை பற்றிய **தவறான** கூற்று
(1) அலங்காரத்துக்கு உதவுவது.
(2) நாடக மோடியைக் காட்டுவது.
(3) நாடக காலத்தைக் காட்டுவது.
(4) பாத்திரத்தின் அசைவுகளை மெருகூட்டுவது.
(5) பாத்திரத்தின் பண்புகளை எடுத்துக்காட்டுவது. (......)


**36.** மேல்வருவனவற்றுள் நடிகர் பற்றிய **பொருத்தமற்ற** கூற்று
(1) உள்ளார்ந்த கற்பனை ஆற்றல் கொண்டவர்.
(2) சபைக்கூச்சம் அற்றவர்.
(3) அழகான உடலைக் கொண்டவர்.
(4) புதிதளிக்கும் ஆற்றல் கொண்டவர்.
(5) சமூக அவதானம் மிக்கவர். (......)

**37.** படத்திற் காட்டப்பட்டுள்ள வேட முகம் இடம்பெறும் நாடகம் யாது ?
(1) கிரேக்க அவலச் சுவை (Tragedy)
(2) கிரேக்க மகிழ்நெறி (Comedy)
(3) யப்பானிய நோ (Noh)
(4) யப்பானிய கபுகி (Kabuki)
(5) சீன ஒபேரா (Opera)




(......)

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள ஐரோப்பிய நாடகவியலாளர் யார் ?
(1) ஹென்றிக் இப்சன்
(2) அன்ரன் செக்கோவ்
(3) பீற்றர் புருக்
(4) சாமுவேல் பெக்கற்
(5) றிச்சட் ஷெக்னர்




(......)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள கூத்து அண்ணாவியாரின் பெயர் என்ன ?
(1) நாகப்பு
(2) செல்லையா
(3) நாகமணிப்போடி
(4) பூந்தான் யோசேப்பு
(5) முருகவேள்



(......)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள காட்சி இடம்பெறும் நாடகம் எது ?
(1) பொறுத்தது போதும்
(2) சங்காரம்
(3) கந்தன் கருணை
(4) முழங்கு முரசு
(5) வெறியாட்டு



(......)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂය අංකය
பாட இலக்கம் **58**

විෂයය
பாடம் **நாடகமும் அரங்கியலும்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 3 | 21. | 3 | 31. | 1 |
| 02. | 5 | 12. | 5 | 22. | 2 | 32. | 4 |
| 03. | 3 | 13. | 3 | 23. | 2 | 33. | 5 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 3 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 1 | 35. | 1 |
| 06. | 5 | 16. | 4 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 2 | 17. | 1 | 27. | 2 | 37. | 2 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 4 | 38. | 4 |
| 09. | 1 | 19. | 4 | 29. | 2 | 39. | 2 |
| 10. | 4 | 20. | 1 | 30. | 2 | 40. | 2 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** (i) 'ஆற்றுகைக் கலைகள்' என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) அரங்கக் கலையை ஏனைய இரு ஆற்றுகைக் கலைகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

(iii) ஆற்றுகைக் கலை, கட்புலக் கலை ஆகியவற்றுடன் அவற்றின் கலைஞர்களும் பார்வையாளர்களும் தொடர்பாடும் தன்மையைப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

**2.** (i) 'அரங்கக் கோட்பாடு' என்ற எண்ணக்கருவை உதாரணங்கள் தந்து விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) உமக்குத் தெரிந்த ஈழத்து அரங்க நெறியாளர் ஒருவர் அல்லது ஒகஸ்ரா போல், அரங்கில் முன்னிறுத்திய கோட்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) மேலே (ii) இல் நீர் தெரிவுசெய்த அரங்கவியலாளரின் கோட்பாடுகள் பற்றிய உமது அபிப்பிராயங்களை முன்வைக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) நாடக பாடம் (dramatic text) ஒன்றை ஆற்றுகை செய்த உமது அனுபவத்தை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(ii) புதிதளிப்பு ஆற்றுகை ஒன்றில் ஈடுபட்ட உமது அனுபவத்தை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) நாடக பாடம், புதிதளிப்பு ஆகிய ஆற்றுகைகளுக்கு இடையிலான வேறுபாட்டைப் பரிசீலிக்குக. (05 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** சிறுவர் அரங்கின் இயல்புகள் பற்றி உதாரணங்கள் தந்து விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** ஈழத்தில் அரங்க விமர்சனத்தின் சமகால நிலையை மதிப்பிட்டு, அதை மேம்படுத்துவதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) திருவிழா
(ii) கோரஸ்
(iii) ரச
(iv) காட்சி அமைப்பு
(v) பட்டறை அரங்கு

(03 × 05 = 15 புள்ளிகள்)

**1.** (i) 'ஆற்றுகைக் கலைகள்' என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.

கலைகளை பொது வழக்கில் பார்வையாளர் முன்னிலையில் பௌதிக ரீதியாக உருவாக்கிக் காட்டுதல் என்பதன்அடிப்படையில் விளக்குதல்.

உதாரணமாக,

- நாடகம்
- இசை
- நடனம்
- பலே

உதாரணங்களின் விளக்கத்தின் ஊடாக ஆற்றுகைக் கலை பற்றி விளக்கியிருப்பினும் புள்ளிகள் வழங்கலாம்

(05 புள்ளிகள்)

(ii) அரங்கக் கலையை ஏனைய இரு ஆற்றுகைக் கலைகளுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

ஏனைய ஆற்றுகைக் கலைகள் இரண்டை எடுத்துக் கூறி, அரங்கக் கலைக்கும் ஆற்றுகை கலைகளுக்கும் இடையிலான, பொதுவான, வேறுபட்ட அம்சங்களை கலை மூலங்களின் அடிப்படையில் எடுத்துக் கூறுவ-தோடு ஒப்பீட்டு அடிப்படையில் அரங்கக் கலையின் வலுவை ஏனைய கலைகளுடன் ஒப்பிட்டு விளக்கல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

(iii) ஆற்றுகைக் கலை, கட்புலக் கலை ஆகியவற்றுடன் அவற்றின் கலைஞர்களும் பார்வையாளர்களும் தொடர்பாடும் தன்மையைப் பரிசீலிக்குக.

ஆற்றுகைக் கலை ஒரு நிகழ்ச்சி. அது நிகழும் போது கலைஞர்களும் பார்ப்போரும் தொடர்பில் (உடல் ரீதியான பிரசன்னம்) இருப்பர் என்பதையும் சிற்பம் ஓவியம் கட்டடம் ஆகிய கட்புலக் கலையில் அவ்வாறு இல்லை என்பதையும் குறிப்பிட்டு. விளக்கல்

(05 புள்ளிகள்)

**2.** (i) 'அரங்கக் கோட்பாடு' என்ற எண்ணக்கருவை உதாரணங்கள் தந்து விளக்குக.

- அரங்கக் கோட்பாடு என்பது
- நிலவும் அரங்கப் போக்கு மீதான விமர்சனம்
- மாற்று அரங்க முறைமை, அதன் நோக்கங்கள், தொழிற்பாடு சிறப்பியல்புகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்கள் கூறி விளக்குதல்.

(05 புள்ளிகள்)

(ii) உமக்குத் தெரிந்த ஈழத்து அரங்க நெறியாளர் ஒருவர் அல்லது ஒகஸ்ரா போல், அரங்கில் முன்னிறுத்திய கோட்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

- பிரபல்யமான நெறியாளர்கள் அல்லது மாணவர்களுடன் தொடர்புபட்ட நெறியாளரைக் குறிப்பிடுவர் அல்லது
- ஒகஸ்ராபோல்

மேற்குறிப்பிட்ட நெறியாளர்களது கோட்பாடு பற்றிக் குறிப்பிடுதல் அக்கோட்பாடு தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார் என்பதை அடிப்படையாகக் கொண்டு விடை அளித்தல் வேண்டும்

(05 புள்ளிகள்)

(iii) மேலே (ii) இல் நீர் தெரிவுசெய்த அரங்கவியலாளரின் கோட்பாடுகள் பற்றிய உமது அபிப்பிராயங்களை முன்வைக்குக.

மேற்கூறிய கோட்பாட்டு அம்சங்கள் பற்றி மாணவரின் அபிப்பிராயங்கள் விவரிக்கப்படல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

**3.** (i) நாடக பாடம் (dramatic text) ஒன்றை ஆற்றுகை செய்த உமது அனுபவத்தை விவரிக்குக.

விதிக்கப்பெற்ற அன்றேல் வேறு நாடக பாடம் ஒன்றைத் தெரிவு செய்வதில் இருந்து ஆற்றுகை செய்வது வரையான செயற்பாடுகள் படிமுறை ரீதியாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். வழமையாக சொல்லப்படுகின்ற படிமுறைகளுக்கு அப்பால் பரீட்சார்த்தியின் அனுபவம் வெளிப்படுத்தப் பெற்றிருத்தல் உதாரணமாக :- சவால்கள், உத்திகள், மன எழுச்சி,புதிய கண்டுபிடிப்புகள்

வழமையான படிமுறையினைக் கூறியிருப்பின் — 03 புள்ளிகள்.

சொந்த அனுபவத்னூடாக விளக்கியிருப்பின் முழுப்புள்ளி வழங்கலாம் — (05 புள்ளிகள்)

(ii) புதிதளிப்பு ஆற்றுகை ஒன்றில் ஈடுபட்ட உமது அனுபவத்தை விவரிக்குக.

புதிதளிப்பு என்றால் என்ன என்பதற்குச் சுருக்கமான விளக்கம் அளிக்கப்பெற்றிருத்தல்.
புதிதளிப்பு ஆற்றுகையில் பரீட்சார்த்தி கையாண்ட படிமுறை, நுட்பங்கள், உத்திகள் சவால்கள் போன்றன வெளிப்பட விடை இறுக்கப்பெற்றிருத்தல்

புதிதளிப்பு பற்றிய விளக்கம் — 01 புள்ளி

புதிதளிப்பு முறையினை கூறியிருப்பின் — 02 புள்ளிகள்

சொந்த அனுபவத்தினூடாக விளக்கியிருப்பின் முழுப்புள்ளி வழங்கலாம்

(05 புள்ளிகள்)

(iii) நாடக பாடம், புதிதளிப்பு ஆகிய ஆற்றுகைகளுக்கு இடையிலான வேறுபாட்டைப் பரிசீலிக்குக.

வினா இல I, வினா இல II என்பவற்றில் பரீட்சார்த்தி மேற்கொண்ட செயற்பாடுகளுக்கிடையிலான வேறு-பாடுகள் பரீட்சார்த்தியின் அனுபவத்தின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இரண்டு முறைகளையும் கூறியிருப்பின் — 02 புள்ளிகள்

வேறுபாடுகளை கூறி விளக்கியிருப்பின் முழுப்புள்ளி வழங்கலாம்

(05 புள்ளிகள்)

## பிரிவு B

**4.** சிறுவர் அரங்கின் இயல்புகள் பற்றி உதாரணங்கள் தந்து விளக்குக.

- சிறுவர் அரங்கு பற்றிய வரைவிலக்கணம் அதன் பார்வையாளர், அது நிகழ்த்தப்படுவதன் நோக்கம், அதன் ஆயத்தம், ஆற்றுகை முறை, பார்வையாளர் துலங்கல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படல் வேண்டும்.

- சிறுவர்களின் உள முதிர்ச்சிக்கு ஏற்ற எளிமையான கதை, இலக்கு பார்வையாளர், ஆடல், பாடல், கதை கூறல், விளையாட்டு, விநோதம், கவர்ச்சி, மகிழ்ச்சி விரவிய ஆற்றுகை முறை, காண்பியங்கள், ஒப்பனைகள், வேட உடை, இசை பாடல்கள் சிறுவர்களின் உளத்தெளிவை ஈடு செய்வனவாகக் காணப்படல் போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

- சிறுவர் நாடகாசிரியர்களையும், சிறுவர் நாடகங்களையும் உதாரணம் காட்டப்படலாம்.

(15 புள்ளிகள்)

**5.** ஈழத்தில் அரங்க விமர்சனத்தின் சமகால நிலையை மதிப்பிட்டு, அதை மேம்படுத்துவதற்கான உமது ஆலோசனைகளை முன்வைக்குக.

- சமகால நாடக விமர்சனங்களே கூறப்படுதல்
- அது ஆக்க பூர்வமான விமர்சனம் நாடக வளர்ச்சிக்கு எவ்வகையில் உதவியது.
- ஈழத்து விமர்சனப் போக்கில் அவர்களின் எத்தகைய விடயங்கள் விமர்சகர்களால் கருத்தில் கொள்ளப்பட்டு வந்துள்ளன.
- அரங்க வளர்ச்சிக்கு அவற்றின் பங்களிப்பு
- அரங்க விமர்சகர்களைக் குறிப்பிட்டு ஈழத்து அரங்க விமர்சனத்தை மேம்படுத்துவதில் அவர்களது பங்களிப்புகள்
- அரங்கும் விமர்சனமும் ஒரு சேர வளர்த்தெடுக்கப்படுவதற்கான ஆலோசனைகள் முன்மொழியப்படுவது எதிர்பார்க்கப்ப பெறுகின்றன

(15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

i. **திருவிழா**

குழும அரங்காகவும் முழுச் சமுகமும் பங்கெடுக்கும் ஒன்றாகவும் சமுகத்தின் அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றாகவும் சமுகக் கூட்டு நிகழ்வாகவும் கொண்டாட்டமாகவும் திருவிழா வெளிப்படும் முறைமை.
பரீட்சார்த்தி தமது குழும அனுபவ உதாரணங்களுடன் இதனை எடுத்துக் கூறுவது எதிர்பார்க்கப் பெறுகின்றது.

(05 புள்ளிகள்)

ii. **கோரஸ்**

கிரேக்க அரங்கில், ஆரம்பத்தில் 'கோரஸ்' கூட்டுச் சமூக அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. பாடி ஆடியதைக் குறித்து வந்த கோரஸ், பின்னாளில் பாடுவதை மாத்திரம் குறித்து நின்றது. ஆற்றுவோரையும் பார்ப்போரையும் நாடக இலக்கை நோக்கி வழிப்படுத்துவதிலும் வியாக்கியானம் செய்வதிலும் கோரஸின்

பங்கு சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும்

கிரேக்க அரங்கினை விளக்கிக் கொள்வதன் ஊடாக கோரஸின் முக்கியத்துவத்தினை எடுத்து விளக்குதல் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

(05 புள்ளிகள்)

iii. ரச

- ரஸ எனும் சொல் 'ரஸ்' எனும் சமஸ்கிருத வினையடியாகப் பிறந்தது.
- ரஸ என்பது பார்ப்போர் நிலைப்பட்ட உணர்ச்சித் தோற்றுகை. கலைஞன் அனுபவித்த மெய்ப்பொருள் அனுபவம் ஆகும்.
- ரஸ என்பதைத் தொழிற் சுவை என்பர். மேலும்
  தொல்காப்பியர் - மெய்ப்பாடு
- கிரேக்கம் - கதாசிஸ்
- யப்பான் - யூஜின் என அழைப்பர்
- அரங்கத்தில் ஆற்றப்படும் நிகழ்வினைக் கண்டு லயித்து நிற்கும் பார்ப்போர் மனதில் தோன்றும் உணர்ச்சி ரஸ எனப்படும்.
- பார்ப்போர் சகிர்தையர் என அழைக்கப்படுவர்
- நாடகங்கள் எவற்றையேனும் துணைக் கொண்டு உதாரணம் வழங்கலாம்.
- எண்வகை ரசங்கள் அவை தோற்றுவிக்கப்படும் முறைமை என்பன குறிப்படப்படுதல் எதிர்பார்க்கப் பெறுகின்றது

(05 புள்ளிகள்)

iv. காட்சியமைப்பு

- காண்பியவழிச்சித்திரிப்பில் காட்சியமைப்பின் முக்கியத்துவம் வெளிக்காட்டப்படும் முறைமை.
- காட்சியமைப்பை விதானிக்கும் விதானிப்பாளர் ஒருவர் கருத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள் அரங்கில் காட்சியமைப்பின் விளைவுகள் அரங்கத் தொடர்பாடல் அவற்றின் பங்களிப்பு.
- வெறும் கவர்ச்சி என்பதிலிருந்து பாரப்போரை சிந்திக்கத் தூண்டுவதற்காகக் காட்சியமைப்புப் பெறும் முக்கியத்துவம் என்பன விளக்கம் செய்யப்படுதல் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

(05 புள்ளிகள்)

v. பட்டறை அரங்கு

- பட்டறை சுயாதீனமாகத் தளைநீக்கல் சூழலைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுனர்கள் அகரீதியாகவும் புற ரீதியாகவும் தளை நீக்கம் செய்யப்படுதல்.
- பங்குபற்றுனர்கள் பட்டறைச் சூழலில் சமூகத்தில் நிலவும் மோதுகைகளைத் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்கண்டு, தமது ஒடுக்குமுறை வடிவங்களை ஆற்றுகைகளாக வெளிப்படுத்தத் துணிதல்.
- ஆற்றுகைகளை பரீட்சார்த்தமாகவும் ஒடுக்குமுறைக்குட்பட்ட குரலாகவும் வெளிப்படுத்துதல்
- ஒகஸ்தாபோல், ஈழத்தில் க.சிதம்பரநாதன் போன்றோரின் முயற்சிகள் பட்டறை அரங்கிற்கான உதாரணங்கள் ஆகும்.
- போலோ ஃபிறேயரியின் விழிப்புணர்வுக் கல்வி, மாணவர் மையக் கல்வி, பிரயோக அணுகுமுறை என்பன பட்டறை அரங்கிற்கான தூண்டி அமைதல்.
- புதிதளித்தல் அரங்காக பட்டறை அரங்கு பரிணமிக்கும் முறைமை எடுத்துக் கூறப்படுதல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

(3x5 = 15 புள்ளிகள்)

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

16.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ...............................

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** செவிவழி நுழையும் ஒலி, இசை, உரை ஆகியவை இணைந்த கலை வடிவம் யாது ?
(1) சினிமா (2) ஒபேறா (3) வானொலி நாடகம்
(4) மேடை நாடகம் (5) பலே (......)

**2.** கைவினையானது கலையிலிருந்து எந்த அம்சத்தின் அடிப்படையில் வேறுபடுகிறது ?
(1) பிரதியீடு இல்லாமை
(2) கற்பனை காணப்படுகின்றமை
(3) அழகை முதன்மையாகக் கொண்டுள்ளமை
(4) மீளுருவாக்கம் செய்யப்படுகின்றமை
(5) மனவெழுச்சி, உணர்ச்சி போன்றவை காணப்படுகின்றமை (......)

**3.** நடிகர் ஒருவர் தனது உரையைத் தனக்குத்தானே பேசுவது எவ்வாறு அழைக்கப்படும் ?
(1) புறச்சொல் (2) தனிமொழி (3) தன்னுரை
(4) ஆகாயக் கிளர்த்தல் (5) அசரீரி (......)

**4.** நாடகவாக்கம் பற்றி எழுதப்பட்ட இரண்டு சமஸ்கிருத நூல்கள்
(1) தொல்காப்பியம், கவிதையியல் (2) கவிதையியல், நாட்டிய சாஸ்திரம்
(3) கவிதையியல், நாடகவியல் (4) தசரூபகம், நாடகவியல்
(5) தசரூபகம், நாட்டிய சாஸ்திரம் (......)

**5.** சிங்கள நாடக அரங்கில் இடம்பெறும் தொவில் என்பது,
(1) பெண்களின் சடங்காகும். (2) பேயோட்டும் சடங்காகும். (3) மகிழ்வளிப்புச் சடங்காகும்.
(4) வேடமுக ஊம நாடகமாகும். (5) கருவளச் சடங்காகும். (......)

**6.** பிரஹஸனம் எனும் நாடக வகை கொண்டிருப்பது,
(1) வரலாற்றுக் கதையையாகும். (2) நகைச்சுவைக் கதையையாகும்.
(3) நாட்டார் கதையையாகும். (4) தொன்மக் கதையையாகும்.
(5) பௌத்த ஜாதகக் கதையையாகும். (......)

**7.** சிலப்பதிகாரத்தில் மாதவியின் நாடகப் பயிற்சி பற்றிக் கூறும் பகுதி
(1) கடலாடு காதை (2) கானல் வரி (3) மங்கல வாழ்த்துப் பாடல்
(4) அரங்கேற்று காதை (5) வழக்காடு காதை (……)

**8.** கதை கூறும் அரங்கு அல்லது எடுத்துரைக்கும் அரங்கு என அழைக்கப்படுவன,
(1) பள்ளு, இசைநாடகம் ஆகியனவாகும்.
(2) கீர்த்தனை, பா நாடகம் ஆகியனவாகும்.
(3) பள்ளு, குறவஞ்சி ஆகியனவாகும்.
(4) நொண்டி, இசைநாடகம் ஆகியனவாகும்.
(5) குறவஞ்சி, இசைநாடகம் ஆகியனவாகும். (……)

**9.** உலக நாடக தினம் எப்போது கொண்டாடப்படுகிறது ?
(1) ஜனவரி 14 (2) பெப்ரவரி 21 (3) மார்ச் 27
(4) ஏப்ரல் 26 (5) ஒக்டோபர் 28 (……)

**10.** முப்பத்திரண்டு வகையான மெய்ப்பாடுகள் பற்றிக் கூறும் நூல்
(1) திருக்குறள் (2) கலித்தொகை (3) மலைபடுகடாம்
(4) தொல்காப்பியம் (5) பரிபாடல் (……)

**11.** களத்துமேடு மேடையாகப் பயன்படுத்தப்படும் நாடகம்
(1) கோலம் (2) நாடகம (3) சொக்கரி
(4) நுர்த்தி (5) வெதஹுட்டன (……)

**12.** தெருக்கூத்தினைப் பாரம்பரியமாக ஆற்றுகை செய்து வந்தவர்
(1) புரிசை கண்ணப்ப தம்பிரான் (2) பிரசன்னா ராமசுவாமி
(3) வெளி ரெங்கராஜன் (4) சூரியநாராயண சாஸ்திரியார்
(5) அ. மங்கை (……)

**13.** தென்கிழக்காசிய நாடக மரபில் பாவைக்கூத்தைப் போன்று மன்னார்ப் பிரதேசத்தில் பயிலப்பட்டு வரும் நாடக மரபு
(1) வாசாப்பு (2) வடபாங்கு (3) தென்பாங்கு
(4) உடக்கு பாசுக்க (5) பாஸ்கா (……)

**14.** சமஸ்கிருத நாடகத்தின் சூத்திரதாரியை ஒத்தவராக சிங்கள 'நாடகம' இல் வருபவர்
(1) பகுபூதையா (2) பொத்தே குரு (3) கோணங்கி
(4) வெசமுனி (5) பபூன் (……)

**15.** நாடக உரையாடல்களில் 'இயாம்பிக்' கவிதைகளைப் பயன்படுத்திய நாடக மரபு
(1) கிரேக்க மரபு (2) நவீன நாடக மரபு (3) எலிசபெத் கால மரபு
(4) உரோம மரபு (5) சமஸ்கிருத மரபு (……)

**16.** 'குளோப் அரங்கு' எந்த வடிவத்தில் அமைந்துள்ளது ?
(1) வட்டம் (2) சதுரம் (3) அரை வட்டம்
(4) ஐங்கோணம் (5) எண்கோணம் (……)

**17.** மேல்வருவனவற்றுள் கலையரசு சொர்ணலிங்கத்தின் நடிப்பு நுட்பங்களில் **உள்ளடங்காதது**
(1) பாத்திரமாகவே மாறி நடித்தல்
(2) மேடையில் நிற்கும் வரை நடித்தல்
(3) நடிப்பில் தூரப்படுத்தலைப் பயன்படுத்துதல்
(4) பார்ப்போரை உணர்ச்சி நிலைக்கு உள்ளாக்குதல்
(5) நடிப்புப் பயிற்சியில் கவனம் செலுத்துதல் (……)

**18.** மேல்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - நடப்பியல் பிரச்சினையை மேடைக்குக் கொண்டு வந்தமை
B - மேடையில் நிற்கும் வரை நடித்தல்
C - சமூக மோதுகை நிலைச் சித்திரிப்பில் விவாகத்தை முக்கிய பிரச்சினையாகப் பேசுதல்
D - கற்பனை பாத்திரங்கள் செயற்கைத் தமிழில் பேசுதல்
E - நடிப்பு, எழுத்துரு, காட்சி ஆகியவற்றில் இயற்பண்புவாத முறைமையைக் கொண்டு வந்தமை
இவற்றுள் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையுடன் தொடர்புடைய கூற்றுகள் யாவை ?
(1) A B C D ஆகியன மாத்திரம் (2) A B C E ஆகியன மாத்திரம்
(3) A B D E ஆகியன மாத்திரம் (4) A C D E ஆகியன மாத்திரம்
(5) B C D E ஆகியன மாத்திரம் (......)

**19.** தெருவெளி அரங்கு பற்றிய பொருத்தமற்ற கூற்று
(1) ஆற்றுகை வெளி தெருவாகும்.
(2) சிறுவர் முதல் பெரியோர் வரை பார்வையாளர்களாகப் பங்குபற்றுவர்.
(3) [illegible]
(4) அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் படைப்பு நடைபெறும்.
(5) சமகால சமூக, அரசியல் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்டிருக்கும். (......)

**20.** சங்க காலத்தில் கிணை, முரசம் போன்ற இசைக் கருவிகளை வாசித்தோர்
(1) விறலியர் (2) கோடியர் (3) பொருநர்
(4) பாணர் (5) வயிரியர் (......)

**21.** சிங்களச் சடங்கரங்கில் 'தஹஅட்ட சன்னிய' என்பது
(1) கண்டிக்குரியது. (2) காலிக்குரியது. (3) மாத்தறைக்குரியது.
(4) அம்பாந்தோட்டைக்குரியது. (5) நீர்கொழும்பிற்குரியது. (......)

**22.** யப்பானிய சாமுராய் போர்வீரர்களின் கதையைக் கூறும் நாடக வடிவம்
(1) கபுக்கி (2) நோ (3) புன்ரகு
(4) கியோஜின் (5) கொளக்கா (......)

**23.** கரடி, சம்பந்தம் ஆகிய நாடகங்களின் ஆசிரியர்
(1) பேர்ணாட்ஷா (2) எமிலிசோலா (3) அன்ரன் செக்கோவ்
(4) சாமுவேல் பெக்கட் (5) பேட்டோல்ட் பிறெக்ட் (......)

**24.** அபத்த அரங்கின் முன்னோடியான சாமுவேல் பெக்கட்டின் தாய்நாடு
(1) ரஷ்யா (2) அமெரிக்கா (3) இங்கிலாந்து
(4) போலந்து (5) ஐரிஸ் தேசம் (......)

**25.** பாத்திரத்தின் அசைவுகளை எடுத்துக்காட்ட உதவுவது
(1) அடிப்பாத ஒளி (2) பரவொளி (3) பொட்டொளி
(4) உரையொளி (5) பெருக்கொளி (......)

**26.** கலையரசு சொர்ணலிங்கம் உருவாக்கிய நாடக சபை
(1) கருணை விலாச சபை (2) [illegible]
(3) சரஸ்வதி விலாச சபை (4) [illegible]
(5) லங்கா சுபோத விலாச சபை (......)

**27.** வில்லியம் சேக்ஸ்பியரின் நாடகங்கள் பெரும்பாலும் எந்த மோடியில் அமைந்திருக்கும் ?
(1) யதார்த்த மோடி (2) அபத்த மோடி (3) குறியீட்டு மோடி
(4) கற்பித மோடி (5) வெளிப்பாட்டு வாத மோடி (......)

**28.** இ. முருகையனால் எழுதப்பட்ட தெருவெளி நாடகம்
(1) மாய மான் (2) கவிப்பு
(3) திருவிழா (4) [illegible]
(5) மானிடம் சுடரும் ஒரு விடுதலை (......)

29. 'தன்னானே கலைக் குழு' இனைத் தொடக்கி வைத்தவர்
(1) மு. இராமசுவாமி (2) ந. முத்துசாமி (3) இராமானுஜம்
(4) கே. ஏ. குணசேகரன் (5) அம்பி (……)

30. சமூக மாற்றத்திற்கான அரங்கு என்ற நூலின் ஆசிரியர்
(1) க. பாலேந்திரா (2) இ. சிவானந்தன் (3) அ. தாசீசியஸ்
(4) இ. முருகையன் (5) க. சிதம்பரநாதன் (……)

31. மேல்வருவோருள் வானொலி நாடகத்துறையுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டவர்
(1) ஏ. ரி. பொன்னுத்துரை (2) திரவியம் இராமச்சந்திரன்
(3) சானா சண்முகநாதன் (4) பெஞ்ஜமின் செல்வம்
(5) அன்ரனி ஜீவா (……)

32. மேல்வருவனவற்றுள் கீர்த்தனை நாடகங்களின் பண்பு **அல்லாதது** எது ?
(1) இசையை மாத்திரம் கருவியாகக் கொண்டது.
(2) தெலுங்கு இசையின் ஆதிக்கத்தைக் கொண்டது.
(3) ஆரம்பத்தில் ஒருவரே கதை கூறி நடிப்பதாக இருந்தது.
(4) இந்துஸ்தானி மெட்டுப் பாக்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டது.
(5) கதாகாலேட்சப மரபிலிருந்து தோன்றியது. (……)

33. சேக்ஸ்பியரின் மேல்வரும் நாடகங்களுள் மகிழ்நெறி (comedy) நாடகமாகக் கொள்ளத்தக்கது
(1) மக்பெத் (2) பன்னிரண்டாம் இரவு
(3) சிம்பலின் (4) அன்ரனியும் கிளியோபெற்றாவும்
(5) த ரெம்பஸ்ற் (……)

34. சிங்கள, ஆங்கில நாடகாசிரியர் ஜெரோம் சில்வா அவர்களால் தொடக்கப்பட்ட நாடக அமைப்பு
(1) திரிகோண ஆர்ட் சென்ரர் (2) அபிநயா கலைக்குழு
(3) மக்கள் களரி (4) வேர்க்சொப் பிளேயர்ஸ்
(5) விபுல ரங்க சபா (……)

35. திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும் 'குளுவ நாடகம்' என்பது,
(1) குறத்தி குறிசொல்லும் மையப் பகுதியைக் குறிக்கும்.
(2) குற்றாலநாதர் மீது வசந்தவல்லி காதல் கொள்வதைக் குறிக்கும்.
(3) சிங்கன், சிங்கி மேல் காதல் கொள்வதைக் குறிக்கும்.
(4) பரமாத்மா ஜீவாத்மாவுடன் சங்கமிப்பதைக் குறிக்கும்.
(5) சிங்கன், சிங்கியைத் தேடுமாறு நூவனிடம் கூறும் பகுதியைக் குறிக்கும். (……)

36. அலங்காரரூபன் கூத்தின் கரு யாது ?
(1) காதலில் சோகம் (2) காதலில் வீரம் (3) காதலில் பக்தி
(4) காதலில் வெற்றி (5) காதலில் தோல்வி (……)

37. 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் மேடைக்கு வரும் பாத்திரங்களை ஒழுங்குமுறையில் கொண்ட தெரிவு யாது ?
(1) நோறா, ஹெல்மர், குறொக்ஸ்டட், ராங், திருமதி. லிண்டே
(2) நோறா, ஹெல்மர், ராங், குறொக்ஸ்டட், திருமதி. லிண்டே
(3) ஹெல்மர், ராங், குறொக்ஸ்டட், திருமதி. லிண்டே
(4) ராங், திருமதி. லிண்டே, நோறா, ஹெல்மர், குறொக்ஸ்டட்
(5) குறொக்ஸ்டட், நோறா, ராங், திருமதி. லிண்டே (……)

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள நவீன சிங்கள நாடகக் கலைஞர் யார் ?
(1) எதிரிவீர சரத்சந்திர
(2) குணசேன கலப்பத்தி
(3) தயானந்த குணவர்தன
(4) ஹென்றி ஜெயசேனா
(5) தம்மஜாகொட



(......)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள வேடமுகம் பயன்படுத்தப்படும் நாடகம் யாது ?
(1) கபுகி
(2) நோ
(3) சீன ஒபேறா
(4) கோலம
(5) சொக்கரி



(......)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள காட்சி நாடகம் எது ?
(1) ஒத்தெல்லோ
(2) யூலியஸ்சீசர்
(3) அன்ரிகனி
(4) ஒரு பாவையின் வீடு
(5) மக்பெத்



(......)

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂය අංකය / பாட இலக்கம்: 58II

විෂයය / பாடம்: நாடகமும் அரங்கியலும்

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 3 | 21. | 1 | 31. | 3 |
| 02. | 4 | 12. | 13 | 22. | 5 | 32. | 4 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 5 | 14. | 2 | 24. | 5 | 34. | 4 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 3 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 5 | 26. | 5 | 36. | 4 |
| 07. | 4 | 17. | 3 | 27. | 4 | 37. | 2 |
| 08. | 3 | 18. | 5 | 28. | 5 | 38. | 4 |
| 09. | 3 | 19. | 4 | 29. | 4 | 39. | 1 |
| 10. | 4 | 20. | 3 | 30. | 5 | 40. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து இரண்டு வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பிரிவு A

**1.** (i) ஒத்தெல்லோ **அல்லது** அபிக்ஞான சாகுந்தலம் நாடக பாடத்திலுள்ள நாடகச் செயல்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) அந்நாடகத்தில் போதுகையை வளர்ப்பதில் மேலே (i) இல் குறிப்பிட்ட செயல்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

**2.** திருக்குற்றாலக் குறவஞ்சி **அல்லது** அலங்காரரூபன் நாடக பாடத்திலிருந்து,

(i) ஏதேனுமொன்றைத் தெரிவுசெய்து அதன் நாடக அமைப்பினைத் தருக. (05 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் தெரிவுசெய்யப்பட்ட நாடகத்தில் உம்மைக் கவர்ந்த பாத்திரங்கள் **இரண்டின்** குணாதிசயங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

**3.** (i) உமது பிரதேசத்தில் பாரம்பரியமாக ஆற்றுகை செய்யப்பட்டுவரும் கூத்துக்களை இனங்காண்க. (05 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட கூத்துக்களில் ஏதாவது ஒன்றில் அக்கூத்தைத் தயாரிக்கும் அண்ணாவியாருக்கும் கூத்துக் கலைஞர்களுக்குமிடையிலான தொடர்பு எவ்வாறு இருக்கும் என்பதனை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iii) கூத்தின் ஆற்றுகைக்கும் பார்ப்போருக்கும் இடையிலான உறவு எவ்வாறு இருக்கும் என்பதனை விளக்குக. (05 புள்ளிகள்)

## பிரிவு B

**4.** தமிழ் நாட்டில் கி. பி. 1300 இற்குப் பின்னர் நிலவிய நாடக வடிவங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் வடிவரீதியான பண்புகளையும் மாற்றங்களையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** ஈழத்துத் தமிழ் அரங்கில் இரு நாடக ஆளுமைகளை இனங்கண்டு, அவர்கள் அரங்கச் செல்நெறியில் திருப்புமுனையை ஏற்படுத்திய விதத்தையும் நாடகத்தைச் சமூக முக்கியத்துவமுடையதாக மாற்றியமைத்த முறையையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஒபேறா

(ii) நாடகம

(iii) விலாசம்

(iv) கிரேக்க சற்றர் (Satyre)

(v) ஜப்பானிய நோ (03 × 05 = 15 புள்ளிகள்)

பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களையும்
பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து,
எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி II
## பிரிவு A

**1.** (i) ஒத்தெல்லோ **அல்லது** அபிக்ஞான சாகுந்தலம் நாடக பாடத்திலுள்ள நாடகச் செயல்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

அவற்றுள் சில உதாரணங்கள்

**ஒத்தெல்லோ**

- கஸியஸ் டெஸ்ரிமோனாவை சந்தித்து தனது இழந்த வேலையைப் பெறுமாறு கோருதல்
- டெஸ்ரிமோனாவின் கைக்குட்டை தொலைதல்
- டெஸ்ரிமோனா ஒத்தெலோவினால் கொல்லப்படுதல்.

(05 புள்ளிகள்)

அல்லது

**அபிக்ஞான சாகுந்தலம்**

- துருவாச முனிவர் சகுந்தலைக்கு சாபமிடல்
- சகுந்தலைக்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்ட கணையாழி துலைதல்
- கணையாளி கிடைக்கப் பெற்றதும் துஷ்யந்தனுக்கு நினைவு வரல்

(ii) அந்நாடகத்தில் மோதுகை வளர்ப்பதில் மேலே (i) இல் குறிப்பிட்ட செயல்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

மாணவர்கள் குறிப்பிட்ட செயல்கள் தொடங்கி முடியும் வரைக்குமான விடயங்களை நாடக பாடத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவர்.

(மோதுகை என்பது போதுகை என எழுத்துப்பிழை காரணமாக வேறு விடைகள் இருப்பினும் பரிசீலித்து புள்ளி வழங்கவும்.)

(10 புள்ளிகள்)

**2.** திருக்குற்றாலக் குறவஞ்சி அல்லது அலங்கார ரூபன் நாடக பாடத்திலிருந்து,

(i) ஏதேனுமொன்றைத் தெரிவுசெய்து அதன் நாடக அமைப்பினைத் தருக.

- ஏதாவது ஒரு நாடக பாட நாடக அமைப்பு எழுதப்படவேண்டும்

உதாரணம் திருக்குற்றாலக் குறவஞ்சி – உலா, குறம், குழுவ நாடகம்

அல்லது

அலங்கார ரூபன் – ஆரம்பம், வளர்ச்சி, உச்சக்கட்டம், முடிவு

(05 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் தெரிவுசெய்யப்பட்ட நாடகத்தில் உம்மைக் கவர்ந்த பாத்திரங்கள் குணாதிசயங்களை விளக்குக.

- ஏதாவது இரண்டு பாத்திரங்களைப் பற்றிக்குறிப்பிட்டு அவற்றின் பௌதீக, உளவியல், சமூக, இயல்பினை, குணாதிசயங்களை குறிப்பிட வேண்டும்

  உதாரணம்

  அலங்கார ரூபன் – இளைஞன், விறகு தலையன், செட்டி போன்ற வேடங்களைத் தாங்குதல் வீரம், கோபம், சோகம், காதல், பக்தி போன்ற உணர்ச்சிகளை வெளியிடல்

  (ஒரு பாத்திரத்துக்கு 05 புள்ளி வீதம் வழங்குக)

(10 புள்ளிகள்)

3. (i) உமது பிரதேசத்தில் பாரம்பரியமாக ஆற்றுகை செய்யப்பட்டுவரும் கூத்துக்களை இனங்காண்க.

மாணவர்கள் தங்களது பிரதேசங்களில் ஆற்றுகை செய்யப்படும் கூத்துக்களை இனங்காண்பர்.

உதாரணம்

மட்டக்களப்பு :- வடமோடிக் கூத்து, தென்மோடிக்கூத்து, பறைமேளக் கூத்து, வசந்தன் கூத்து, மகிடிக்கூத்து..

யாழ்ப்பாணம் :- வடமோடிக் கூத்து, தென்மோடிக்கூத்து, காத்தவராயன் கூத்து, வசந்தன் கூத்து, நாட்டை க்கூத்து..

மன்னார் :- வடபாங்கு,தென்பாங்கு, வாசாப்பு கூத்து, உடக்குபாஸ்...

வன்னிப் பிரதேசம் :- கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து ,குடமுதற் கூத்து, வசந்தன் கூத்து.

மலையகம் :- அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், காமன் கூத்து, வீரபத்திரர் ஆட்டம்

(ஏனைய பிரதேச கூத்துக்கள் குறிப்பிட்டிருப்பின் பரிசீலித்து புள்ளிகள் வழங்கவும்)

(05 புள்ளி)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட கூத்துக்களில் ஏதாவது ஒன்றில் அக்கூத்தைத் தயாரிக்கும் அண்ணாவியாருக்கும் கூத்துக் கலைஞர்களுக்குமிடையிலான தொடர்பு எவ்வாறு இருக்கும் என்பதனை விவரிக்குக.

கூத்தில் ஏடு தெரிவு செய்யப்படுவதிலிருந்து கூத்தைப் பழக்கி அரங்கேற்றும் வரைக்கும் அண்ணாவியாருக்கும் பங்குபெறும் கலைஞர்களுக்குமிடையிலான தொடர்பு தொடர்ச்சியாக பேணப்படும் என்பதைக் குறிப்பிடுதல்

(05 புள்ளிகள்)

(iii) கூத்தின் ஆற்றுகைக்கும் பார்ப்போருக்கும் இடையிலான உறவு எவ்வாறு இருக்கும் என்பதனை விளக்குக.

கூத்து அளிக்கை வெளியில், பார்வையாளர் பிரசன்னம் இன்றியமையாததாகும்

உணர்வு ரீதியான ஊடாட்டங்கள் :- சிரித்தல், மகிழ்தல், சேர்ந்து பாடுதல், கை தட்டல், பிழைவிடும் போது பாடலை எடுத்துக் கொடுத்தல்.

பௌதிகரீதியான ஊடாட்டங்கள் :- வெடி கொழுத்துதல், பூமாலை மற்றும் காசுமாலை போடுதல், சால்வை கட்டுதல் போன்றன குறிப்பிடப்பட்டிருப்பின் கவனத்தில் கொள்ளவும்.

(05 புள்ளி)

## பிரிவு B

**4.** தமிழ் நாட்டில் கி. பி. 1300 இற்குப் பின்னர் நிலவிய நாடக வடிவங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் வடிவரீதியான பண்புகளையும் மாற்றங்களையும் விளக்குக.

- தமிழ்நாட்டில் கி.பி.1300 க்கு பின்னர் ஏற்பட்ட சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் மாற்றம் அரங்க அழிக்க முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது.
- இக்காலத்தில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, கீர்த்தனைநாடகங்கள், தெருக்கூத்து, பார்ஸி மரபு, மற்றும் நவீன நாடகங்கள் தோற்றம் பெற்றன
- அடிநிலை மக்கள் பாத்திரங்காளாக முதல்முதலாக வரத் தொடங்குகினர்
- உயர்குழாம் தனது பிரச்சாரத் தேவைக்கு அடிநிலைப் பாத்திரங்களை கையாண்டனர்.
- கதைகூறும் பண்பு முக்கியம் பெற்றது.

போன்ற வடிவரீதியான பண்புகளையும் மாற்றங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்

(15 புள்ளிகள்)

**5.** ஈழத்துத் தமிழ் அரங்கில் இரு நாடக ஆளுமைகளை இனங்கண்டு, அவர்கள் அரங்கச் செல்நெறியில் திருப்புமுனையை ஏற்படுத்திய விதத்தையும் நாடகத்தைச் சமூக முக்கியத்துவமுடையதாக மாற்றியமைத்த முறையையும் விளக்குக.

ஈழத்து தமிழ் அரங்கின் செல்நெறியின் திருப்பு முனையை ஏற்படுத்திய ஆளுமையினருள் இருவரைப் பெயரிட்டிருக்க வேண்டும்.

உதாரணம்

- கலையரசு சொர்ணலிங்கம்
- பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
- பேராசிரியர் சு. வித்தியானந்தன்
- அ. தாசீசியஸ்
- நா. சுந்தரலிங்கம்
- குழந்தை ம. சண்முகலிங்கம்
- பேராசிரியர் சி. மௌனகுரு
- க. பாலேந்திரா
- க. சிதம்பர நாதன்

மேற்படி ஆளுமையினர் தவிர்ந்து வேறு ஆளுமையினரது பெயர்கள் குறிப்பிட்டிருப்பின் அவர்கள் அரங்கில் செல்நெறியில் ஏற்படுத்திய திருப்புமுனைகளையும் நாடகம் சமூக முக்கியத்துவம் உடைதாக மாற்றியமைத்த முறைமையையும் குறிப்பிட்டு நியாயப்படுத்தலை முன் வைத்திருப்பின் புள்ளிகள் வழங்கலாம்

(15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஒபேறா
(ii) நாடகம
(iii) விலாசம்
(iv) கிரேக்க சற்றர் (Satyre)
(v) ஜப்பானிய நோ

i. ஒபேரா

- 16 ம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய இசை நாடக வடிவம்.
- பாடல் வழி நடித்துக் காட்டப்படும்
- சீன நாடக மரபின் பீஜிங்ஒபேராவும் குறிப்பிடப்படும்.
- இலங்கையின் ஒபேரா நாடக வடிவத்திற்கு உதாரணங்களாக அக்னி, மானசவில
- அரங்க மூலங்களின் அடிப்படையில் ஒபேரா வடிவம் பார்க்கப்படல் வேண்டும்

(05 புள்ளிகள்)

ii. நாடகம

- சிங்கள பாரம்பரிய மரபுவழி நாடகங்களின் நாடகம முக்கியத்துவம் பெறுகின்றது
- இதன் தோற்றம் ஆற்றுகை முறைமை, அரங்கு, அதன் முக்கியத்துவம், பேண்ணிலை எடுத்து விளக்கப்படுதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(05 புள்ளிகள்)

iii. விலாசம்

- கூத்து மரபை அடியொற்றி தென்னிந்தியாவில் இருந்து 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்திற்கு புகுந்த வடிவம்
- பார்ஸி நாடகக் கம்பனிகளாலும், மராத்திய நாடக கம்பனிகளாலும் தமிழில் கொண்டு வரப்பட்ட நாடக வடிவம்.
- தமிழ் நாட்டில் விலாசம் வந்து புகுந்த போது கூத்தாக ஆடப்பட்ட கதைகள் விலாசமாக ஆடப்பட்டன
  உதாரணம் :- இரணிய நாடகம், பூதத்தம்பி கதை
- கொட்டகைகளில் நடத்தப்பட்டன
- ஒருபக்க பார்வையாளரும் அண்ணாவியார் பக்கப்பாட்டுக் காரரும் மேடையில் ஒரு புறத்துக்குச் செல்கின்றனர்
- கர்நாடக இசை பிரதான இடத்தைப் பெறுகின்றது.

(05 புள்ளிகள்)

iv. கிரேக்க சற்றயர் (Satyre)

- கிரேக்கத்தில் தோற்றம் பெற்ற அங்கதச் சுவையுடைய வடிவம் சற்றயர் ஆகும்.
- இது வனதேவதை நாடகம் என அழைக்கப்படுகிறது.
- Satyre என்பது பாதி மனிதனையும் பாதிக் குதிரையையும் கொண்டதொரு பிராணி ஆகும். இதனால் பாதி மனிதப் பண்பும் பாதி மிருகப் பண்பும் கொண்ட நாடக வடிம்.
- கிரேக்க நாடக விழாக்களில் 03 திறஜெடி நாடகங்கள் நிகழ்த்தப்பட்ட பின்னர் நான்காவதாக சற்றயர் நிகழ்த்தப்படும்
- வேடமுகம் அணிந்து நடிப்பர்
  உதாரணம் :- சோபோக்கிளிஸ் - Trackers
  உதாரணம் :- யூரிப்பிடிஸ் - The cyclops

(05 புள்ளிகள்)

V. ஜப்பானிய நோ

- ஜப்பானிய புராதன நாடக வடிவமாகும்
- நோ என்பதன் பொருள் மேலான ஒன்று என்பதாகும். அதாவது தேற்சிப்பலம், புத்தி மகிமை என்பனவற்றைக் குறிக்கும்.
- இதன் ஆற்றுகை முறைமை, அதன் அரங்கு, அதன் பார்ப்போர் என்பனவற்றை எடுத்து விளக்கப்படுதல் எதிர்பார்க்கப்பெறுகின்றது.

(05 புள்ளிகள்)

(3x05 =15 புள்ளிகள்)